உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

க.பொ.உயர்தரம் - தமிழ் - கம்பராமாயணம் - 01 - நேரம்:30 நிமிடம்

விடைப்பத்திரம் : குகப்படலம்

தயாரிப்பு :திரு.எ.த.ஜெயராஞ்சித் (0779050592)
BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

வினாத்தொகுதி:01

(ஆ)"பூவிரி பொலன் கழல், பொரு இல் தானையான்,
காவிரி நாடு அன்ன கழனி நாடு ஒரீஇ,
தாவர சங்கமம் என்னும் தன்மைய
யாவையும் இரங்கிட, கங்கை எய்தினான்.(01)

(i) இச் செய்யுளில் வெளிப்படும் பரதனின் சிறப்புக்கள் எவை?

- பூத் தொழிலாற் சிறப்புற்ற, பொன்னாற் செய்யப்பெற்ற வீரக்கழலை அணிந்த, ஒப்பற்றசேனையை உடையவன்.
- காவிரி நதியால் வளம் பெறும் (தமிழகத்துச்) சோழ நாட்டை ஒத்த, வயல் வளம் பொருந்திய கோசல நாட்டை உடையவன்.
- நிலைத்திணை,இயங்கு திணை என இரண்டாகப் பிரிக்கப்பெறும் எல்லா உயிர்களும்,தன் நிலை கண்டு வருந்தத்தக்க சிறப்புடையவன்.

(04 புள்ளிகள்)

(ii) இச் செய்யுளில் குறிப்பிடப்படும் நிலைத்திணை, இயங்குதிணைகள் எவை?

- நிலைத்திணைகள்: ஒரே இடத்தில் நிலையாக இருப்பன நிலைத்திணையாகிய மரம்,செடி முதலிய தாவரங்களாகும்.
- இயங்குதிணைகள்: இடம் விட்டுப்பெயர்ந்து செல்லும் தன்மை படைத்த ஊர்வன. நீர் வாழ்வன, பறவை, விலங்கு, மனிதர், தேவர் முதலியவை இயங்கு திணைகளாகும்.

(04 புள்ளிகள்)

(iii) "காவிரி நாடு அன்ன கழனி நாடு ஒரீஇ", எனும் தொடரின் சிறப்பை விளக்குக.

- கம்பர் தம்முடைய நாடாகிய சோழநாட்டைக் கோசல நாட்டுக்கு உவமையாக்கினார். உவமை பொருளினும் உயர்ந்ததாக இருக்கவேண்டும் என்பது இலக்கணம். என்பதனால் இங்குக் கோசல நாட்டினும் சோழ நாடு உயர்ந்தது என்றாயிற்று இங்ஙனம் தம் நாட்டை மீக்கூறியது கம்பரது தாய்நாட்டுப் பற்றைக் காட்டும். சோழநாடு போலவே கோசல நாட்டிலும் பயிரில்லாத வெற்றிடம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

www.ikeu.lk

வினாத்தொகுதி:02

(ஆ) பாலை ஏய் நிறத்தொடு, பண்டு தான் படர்
ஓலை ஏய் நெடுங் கடல், ஓடிற்று இல்லையால்-
மாலை ஏய் நெடு முடி மன்னன் சேனை ஆம்
வேலையை மடுத்தது, அக் கங்கை வெள்ளமே.(04)

(i) இப்பாடல் இடம்பெற்றுள்ள சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.

- பெருஞ் சேனையுடன் இராமனைக்காண கங்கைக் கரையை வந்தடைந்த பரதனது படைகளைக் கண்டு, சினங்கொண்ட குகன், தன் படைகளைத் திரட்டி கங்கையின் மறுபுறத்தில் வந்து நின்ற சந்தர்பத்தில்.

(04 புள்ளிகள்)

(ii) பரதனது படைப்பெருமையை கம்பன் எவ்வாறு புனைந்துரைக்கின்றான்?

- காலாட்படையின் பெருமையை உயர்வு நவிச்சி அணிமூலம் குறிப்பிடுகின்றான்.
- பரதனது சேனைக்கடல் வழிவந்த இளைப்பினால் கங்கை நீரைப்பருகிய படியால் கங்கையில் நீரே இல்லையாகிவிட்டது. எனவே, கடலில் கங்கை கலக்கவில்லை என உயர்வு நவிற்சியாகக் கூறிச் சேனை மிகுதியைக்காட்டினார்.
- மத நீர்ப் பெருக்குக் கலந்தலாலும், சேனை மிகுதி உழக்கலாலும் கங்கையின் கங்கையின் வெண்ணிறம் மாறிக் பால் நிறமாக கடலில் கலந்தது என உயர்வு நவிற்சியாக கூறினார்.
- கடலினும் சேனை மிகுதி என்பது கூறியதாம், யானை, குதிரை மிகுதி கூறினார் இப்பாடலால் காலாட்படையின் மிகுதி கூறினார்.

(04 புள்ளிகள்)

(iii) பாடலில் இடம்பெற்றுள்ள அணிகளை எடுத்தக்காட்டுக.

- **உவமை:** பாலை ஏய் நிறத்தொடு படர்:கங்கை நீர் பெருக்கு பால் நித்துக்கு உவமையாக்கப்பட்டுள்ளது.
- **உயர்வு நவிற்சி**: மத நீர்ப் பெருக்குக் கலந்தலாலும், சேனை மிகுதியாக உழக்கலாலும் கங்கையின் வெண்ணிறம் மாறிக் பால் நிறமாக கடலில் கலந்தது என உயர்வு நவிற்சியாக கூறினார்.

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

www.ikeduk

உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

க.பொ.உயர்தரம் - தமிழ் - கம்பராமாயணம் - 02 - நேரம்:30 நிமிடம்

விடைப்பத்திரம் : குகப்படலம்

தயாரிப்பு :திரு.எ.த.ஜெயராஞ்சித் (0779050592)

BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

வினாத்தொகுதி:01

(ஆ) குகன் எனப் பெயரிய கூற்றின் ஆற்றலான்
தொகை முரண் சேனையைத் துகளின் நோக்குவான்
நகை மிக, கண்கள் தீ நாற, நாசியில்
புகை உற, குனிப்புறும் புருவப் போர்விலான்.(07)

(i) இப்பாடலில் குறிப்பிடப்படும் குகனின் சீற்ற மெய்ப்பாடுகள் யாவை?

* கூட்டமாக உள்ள வலிமை படைத்த (பரதன்)சேனையை, ஒரு தூசி போலப் பார்ப்பவனாய்,
* இகழ்ச்சிச் சிரிப்பு அதிகமாதல்
* கண்களிலிருந்து நெருப்புத் தோன்றல்
* உள்ளே எரியும் கோப நெருப்பால் மூக்கிலிருந்து புகை வெளிவரல்.
* கோபத்தாலமேலேறிவளைந்தபுருவமாகிய போர்க்குரிய வில்லை உடையனானான்.

(04 புள்ளிகள்)

(ii) குகன்,"பெயரிய கூற்றின் ஆற்றலான்" எனக் குறிப்பிடப்பட்டதிற்கான காரணம் யாது?

* யமனை ஒத்த பராக்கிரமத்தை உடைய வேடர் தலைவன்.
* யமன் புரியும் கொலைத் தொழிலை இவனும் பாவ புண்ணியமறிந்து செய்ய வல்லான்.
* யமனுக்குரிய தோற்றப்பாடுகளை உடையவனாக காணப்படுதல்.

(04 புள்ளிகள்)

(iii) கையாளப்பட்டுள்ள உருவக அணியினை எடுத்துக்காட்டுக.

புருவப் போர்வில்என்றது உருவகம். புருவத்துக்கு வில் உவமை. வுளைதல் தன்மையால் போர்க்கு மேலும் வளைப்பர். அதுபோல இங்கே கோபத்தால் புருவம் மேலேறி மேலும் வளைந்தது.

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

www.kedu.lk

<u>வினாத்தொகுதி:02</u>

(ஆ) கட்டிய சுரிகையன், கடித்த வாயினன்,
வெட்டிய மொழியினன், விழிக்கும் தீயினன்,
கொட்டிய துடியினன், குறிக்கும் கொம்பினன்,
'கிட்டியது அமர்' எனக் கிளரும் தோளினான்.(9)

(i) இப்பாடலில் இடம்பெற்றுள்ள மேல்வரும் தொடர்களின் பொருளை எழுதுக.

- கட்டிய சுரிகையன் - இடையில் கட்டப்பெற்றுள்ள உடையவாளை உடையவன்
- வெட்டிய மொழியினன் - கடுமையாகப் பேசும் சொற்களை உடையவன்.
- கொட்டிய துடியினன் - அடிக்கப் பெறும் உடுக்கையை உடையவன்.
- குறிக்கும் கொம்பினன் - போர் குறித்து ஒலிக்கப் பெறும் ஊது கொம்பினை உடையவன்.

(04 புள்ளிகள்)

(ii) இப்பாடலில் வெளிப்படும் குகனின் கோப மெய்ப்பாடுகள் யாவை?

- கோப மேலீட்டால் உதட்டைப் பற்களால் கடித்தல்.
- உரத்த சத்தமிட்டுக் கடுமையாகப்பேசுதல்.
- கண்கள் கனல் சிந்தச் சிவந்து பார்த்தல்.

(04 புள்ளிகள்)

(iii) 'கிட்டியது அமர்' எனக் கிளரும் தோளினான் எனும் தொடர் ஊடாக வெளிப்படத்தப்படுவது யாது?

- போர் விரர்களின் மகிழ்ச்சி நிலை: போர் கிடைத்தால் சுத்த வீரர்களாயிருப்போர் மகிழ்தல் இயல்பு.இதனால் 'கிட்டியது அமர்'என்றதால் குகனது தோள்கள் மகிழ்ச்சிநிலையால் கிளர்ச்சியுற்றன எனலாம்.

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

www.lkedu.lk

உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

க.பொ.உயர்தரம் - தமிழ் - கம்பராமாயணம் - 03 - நேரம்:30 நிமிடம்

விடைப்பத்திரம் : குகப்படலம்

தயாரிப்பு :திரு.எ.த.ஜெயரஞ்சித் (0779050592)
BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

வினாத்தொகுதி:01

(ஆ) எலியெலாம் மிப்படை யரவம் யானென
வொலியுலாஞ் சேனையை யுவந்து கூவினான்
வலியுலா முலகினில் வாழும் வள்ளுகிர்ப்
புலியெலா மொருவழிப் புகுந்த போலவே.(10)

(i) இப்பாடல் இடம்பெறும் சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.

* பெருஞ் சேனையுடன் இராமனைக்காண கங்கைக் கரையை வந்தடைந்த பரதனது படைகளைக் கண்டு, சினங்கொண்ட குகன், தன் படைகளைத்திரட்டி வீரவசனம் பேசிய சந்தர்பத்தில்.

(04 புள்ளிகள்)

(ii) இப்பாடலில் இடம்பெற்றுள்ள அணிகளை எடுத்துக்காட்டுக.

* உருவகம்: எலிக்கு நாகம் பகையாகையால், பரதனின் படைகளை எலியாகவும்,தன்னைப் பாம்பாகவும் உருவகிக்கப்பட்டது.
* உவமை: உலகத்தில் வசிக்கின்ற வலிமை நிரம்பிய வளமான கூரிய நகத்தை உடைய புலிகள் எல்லாம் ஒரே இடத்தில் வந்து சேர்ந்தன போல குகனது படைகள் வந்து சேர்ந்தன.

(யாதாயினும் ஓர் அணியினை எடுத்துக்காட்டி விளக்கினால் போதும்

(04 புள்ளிகள்)

(iii) 'எலி எலாம் இப் படை அரவம், யான்' என எனும் தொடர் மூலமாக கம்பன் உணர்த்த விளைவது

* குகனின் இவ்வார்த்தைகளுடாக, தன் வீரம் பற்றிய தன்னம்பிக்கையையும் பரத படைகளின் இழிவையும் உணர்த்தியுள்ளார்.

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

www.ikeu.lk

வினாத்தொகுதி:02

(ஆ) 'துடி எறி நெறிகளும், துறையும், சுற்றுற

ஓடியெறி அம்பிகள் யாதும் ஓட்டலிர்

கடி எறி கங்கையின் கரை வந்தோர்களைப்

பிடி எறி, பட' எனா, பெயர்த்தும் கூறுவான்.(13)

(i) இப்பாடல் இடம்பெற்றுள்ள சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.

* பெருஞ் சேனையுடன் இராமனைக்காண கங்கைக் கரையை வந்தடைந்த பரதனது படைகளைக் கண்டு, சினங்கொண்ட குகன், தன் படைகளைத்திரட்டி, கங்கையின் மறுபுறத்தில் வந்து நின்று அச்சேனை தென்கரையை அடையாதபடி தன் சேனைகளுக்குக் போர்க்கட்டளைகளை இடுகின்ற சந்தர்பத்தில்.

(04 புள்ளிகள்)

(ii) குகன் தன் படைகளுக்கு இட்ட கட்டளைகள் யாவை?

* போர்ப் பறைகளை அடியுங்கள்
* வருவதற்குரிய வழிகளையும் (தென்கரையில்) ஏறுதற்குரிய துறைகளையும், அழித்து நீக்கி, இல்லாமல் செய்யுங்கள்
* தோணிகளுள் ஒன்றையும் (கங்கையில்) ஓட்டாதீர்கள்
* விரைந்து அலை வீசிவருகின்ற கங்கையாற்றின் தென்கரைக்கு (தரமாக முயன்று)வந்தவர்களை பிடியுங்கள் இறக்கும்படி அழியுங்கள்

(04 புள்ளிகள்)

(iii) குகனது தலைமைப் பண்பு இப்பாடலில் வெளிப்படுமாற்றினை எடுத்துக்காட்டுக.

* பரதனது சேனை இராமன்மேல் படையெடுத்து வந்துள்ளதாகக் குகன் கருதி அச்சேனை தென்கரை அடையாதபடி எச்சரிக்கையாகத் தன் சேனைகளுக்குக் கட்டளை இடுவது.
* அச் சேனை வீரர்கள் உற்சாகம் அடைவதற்காகச் கடி எறி பிடி, பட எறி ஓட்டலிர் என வார்த்தைகள் கூறுவது.
* 'தோணிகள் ஓட்டாதீர்' என்றான் ஆதலின் விரைந்து அலைவீசி ஓடும் கங்கையில் தோணிகள் உதவியின்றித் தென்கரை அடைதல் இயலாதென்ற ஆரூடம் கூறும் திறன்.
* அதனையும் மீறித் தம் ஆற்றலால் வருவாரைப் 'பிடி', 'பட எறி' என்பது அதன்பின் கூறுவது.
* எறி, பிடி என வீரரைத் தனித்தனி நோக்கி ஒருமையிலும், ஓட்டலிர் எனக் கூட்டமாக பார்த்துப் பன்மையிலும் கூறினான்.

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

www.kedu.lk

உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

க.பொ.உயர்தரம் - தமிழ் - கம்பராமாயணம் - 04 - நேரம்:30 நிமிடம்

விடைப்பத்திரம் : குகப்படலம்

தயாரிப்பு :திரு.எ.த.ஜெயராஞ்சித் (0779050592)

BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

வினாத்தொகுதி:01

(ஆ) 'அஞ்சன வண்ணன், என் ஆர்உயிர் நாயகன், ஆளாமே,
வஞ்சனையால் அரசு எய்தியமன்னரும் வந்தாரே!
செஞ் சரம் என்பன தீ உமிழ்கின்றன, செல்லாவோ?
உஞ்சு இவர் போய்விடின்,''நாய்க்குகன்''என்று, எனை ஓதாரோ?(14)

(i) இப்பாடல் இடம்பெற்றுள்ள சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.

- பெருஞ் சேனையுடன் இராமனைக்காண கங்கைக் கரையை வந்தடைந்த பரதனது படைகளைக் கண்டு, சினங்கொண்ட குகன், தன் படைகளைத்திரட்டி, கங்கையின் மறுபுறத்தில் வந்து நின்று அச்சேனை தென்கரையை அடையாதபடி தன் சேனைகளுக்குக் வீர வார்த்தைகளை - போர்க்கட்டளைகளை இடுகின்ற சந்தர்பத்தில்.

(04 புள்ளிகள்)

(ii) இராமனின் அழகும் அவன் மீதான பற்றும்,பரதனின் இழிவும் குகனால் எடுத்துரைக்கப்படுமாற்றை விளக்குக.

- **இராமனின் அழகும் : அஞ்சன வண்ணன்:** கரு மை போலும் கருமையான நிறமான திருமேனி அழகனாக விளங்குபவன்.
- **அவன் மீதான பற்று: என் ஆர்உயிர் நாயகன்:** குகனுக்கு அரிய உயிர்த் துணைவனாக விளங்கும் தன்மையன்.குகனை இயக்கும் ஆதாரம் இராமனே.
- **பரதனின் இழிவு: வஞ்சனையால் அரசு எய்தியமன்னரும் வந்தாரே:** சூழ்ச்சியால் அவ்வரசாட்சியைக் கைப்பற்றி அடைந்த அரசரும் பரதரும் இதோஎன்னருகில் வந்துள்ளார்கள் அன்றோ: 'உம்' 'ஏ' இழிவுப் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

(04 புள்ளிகள்)

(iii) குகன் தன்னை 'நாய்க்குகன்' எனக் குறிப்பிட்டதன் பொருத்தப்பாடு யாது?

- 'நாய்' என்பது ஒருவரைக் கீழ்மைப்படுத்திப் பேசுதற்குப் பயன்படுவது ஆதலின் இங்கே 'நாய்க் குகன்' என்று உலகம் தன்னை இழித்துப் பேசும் என்றான்.
- பரதனின் படைகளைப் குகன் போகவிட்டால், இராமனிடத்துக் காட்டும் நன்றியுணர்வுக்கு மாறானது. அச்செயலைச் செய்யும் குகனுக்கு நன்றியுணர்வில் சிறந்த நாயைக் கூறலாமோ எனின், அது பொருந்தாது.
- நாய் நன்றியுணர்விற் சிறந்ததாயினும் தன் வீட்டுக்கு உடையவரிடத்து காட்டும் நன்றியுணர்வைத் தன் வீட்டில் திருட வரும் திருடர் தனக்கோர் உணவு கொடுத்தால் அவரிடத்தும் நன்றி காட்டிக் குரைக்காது ஒரேதன்மையாகவே இருந்துவிடல் பற்றி அதன் நன்றியுணர்வும் சிறப்பின்மை கண்டு உலகம் அதனைக் கீழ்மைப்படுத்திக் கூறுதல் தெளிவாகும்.
- 'குகன் நாய்' என்று சொல்வதிலும் பார்க்க 'நாய்க் குகன்' என்பது மேலும் அதிகமான இளிவைச் சுட்டலாம்.

(04 புள்ளிகள்)
(12 புள்ளிகள்)

www.ikeduk

<u>வினாத்தொகுதி:02</u>

(ஆ) 'ஆழ நெடுந் திரை ஆறு கடந்து இவர் போவாரோ?

வேழ நெடும் படை கண்டுவிலங்கிடும் வில்லாளோ?

''தோழமை'' என்று, அவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ?

ஏழமை வேடன் இறந்திலன்'' என்று எனை ஏசாரோ? (15)

(i) வேழ நெடும்படை,விலங்கிடும்,வில்லாள்,ஏழமை வேடன் எனும் தொடர்களின் பொருள்களை எழுதுக.

- வேழ நெடும்படை: யானைகளை உடைய நீண்ட பெரிய சேனை
- விலங்கிடும்: புறமுதுகு காட்டி விலகிச் செல்லுகின்ற,விலகுகின்ற.
- வில்லாள்: வில் வீரன்,விற்கலையிற் சிறந்தவன்.
- ஏழமை வேடன்: அற்பனாகிய வேடன்,அறியாமையுடைய வேடன்.

(04 புள்ளிகள்)

(ii) இராமனிடத்து குகனது தோழமையின் வலிமை எவ்வாறு வெளிப்படுகின்றது என்பதை எடுத்துக்காட்டுக.

- உனக்கும் எனக்கும் நட்பு என்பதாக அந்த இராமபிரான் சொல்லிய வார்த்தை காப்பாற்றி,மதிக்கப்பட வேண்டிய ஒப்பற்ற வார்த்தை அல்லவா? என்பது.
- அந்நட்புக்கு மாறாக இவர்களைப் போகவிட்டால் அற்பனாகிய இந்த வேடன் இவ்வாறு இராமனோடு நட்புச் செய்து, இப்பொழுது சேனைக்குப் பயந்து இராமனை எதிர்க்கும் பரதனோடு நட்பாய் மானங்கெட்டு வாழ்தலைவிட இறக்கலாமே என எண்ணுவது.

(04 புள்ளிகள்)

(iii) "ஆழ நெடுந் திரை ஆறு கடந்து இவர் போவாரோ" எனும் தொடரில் கம்பனது கவியாற்றல் வெளிப்படுமாற்றை எடுத்துக்காட்டுக.

- பரத சத்துருக்கப் படைகள்,மிகுந்த ஆழத்தையும் நீண்ட பெரிய அலைகளையும் உடைய கங்கையாற்றை தாண்டி என் உதவியில்லாமல் அப்பால் தென்கரைப் பகுதிக்குச் சென்றுவிடுவார்களா? செல்லத்தான் விடுவேனா? ஒருவேளை பரத சத்துருக்கப் படை வலிமையால் சென்றுவிடுவார்களோ? என்பதையெல்லாம் இத் தொடர் சுட்டுகிறது.
- 'ஆழநெடுந் திரை ஆறு' என்பது போர் வலிமையும் மிக்க ஆரவாரமுமுடைய தனது(குகனது) படையையும் கருதினான் எனலாம்.கங்கை நீரால் வளங்கொடுத்து காக்வும்,வலிமை கெடுத்து அழித்திடவும் முடியும். அவ்வாறே குகனது படைகளும்.
- 'கடந்து' என்பதிலுள்ள கடத்தல் என்பதன் பொருள்,நெடுந்தூரம்,நெடும்படை வலிமை, நெடிய துன்பம்,பெருங் கடினம் எனும் கருத்துக்களைப் புலப்படுத்திநிற்கிறது.
- குகனது உதவியில்லாமல் இக்கங்கையாற்றைக் கடந்து செல்வதென்பது பரதனால் முடியாத செயல் என்பதைப் இவ்வரி புலப்படுத்தும். பரதன் தன் படைவலிமையால் என்னைப் பயமுறுத்தி கங்கைக் கரையை கடப்பதென்பது அசாத்தியமே.
- ஒருவேளை சென்றுவிடுவார்களோ? என்ற சந்தேகமும் 'போவாரோ' என்பதில் ஓகாரம் ஐயவினாப் பொருளில் குகனிடத்தில் தோன்றுகிறது.அறிவுமிக்க படைத்தலைமைகள் போரின்போது வெறும் வெற்றியை மட்டும் சிந்திப்பதில்லை. அவர்கள் தோல்வியையும சிந்தித்தே செயல் படுவர் என்பதை குகனது ஐயவினா உணர்த்துகின்றது.
- 'ஆறு'என்பது வழி,இயங்கி ஓடிக்கொண்டிருப்பது,வழிப்படுத்துவதெனறும் சொல்லப்படுவதில் இக்கங்கை வழியை ஆரவாரித்து இயங்கிக் கொண்டுள்ள தன்படைகளின் ஆற்றுப்படுத்தலில்லாமல் - உதவியிலாமல் போய்விட முடியாது என்பதையும் சுட்டி நிற்கிறது.
- 'இவர்' என்பது முன்னிலைச் சுட்டாயினும் இழி நிலைப் பொருளில் கையாளப்பட்டுள்ளது.பரதனைச் சுட்டுமிடங்களில் குகன் 'இவர்' என்றே சுட்டுகிறான்.இராமனைச் சுட்டுமிடங்களில் 'அவர்' என்றே சுட்டுகின்றார்.
- 'போவாரோ', என்பதன் எதிர்மறை(என் உதவியின்றி போக முடியாது,நான் போகவும் விடமாட்டேன்)இறுதியில் ஓகாரம் ஐயவினாப் பொருளில் (ஒருவேளை பரத சத்துருக்க படைவலியால் போய் விடுவார்களோ?)வந்துள்ளது. எனினும் எதிர்மறை உடன் பாட்டுப் பொருள் என்ற கருத்தில் 'ஓ' என்பதை எதிர்மறை எனவும் கூறலாம்.

(04 புள்ளிகள்)
(12 புள்ளிகள்)

உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

க.பொ.உயர்தரம் - தமிழ் - கம்பராமாயணம் - 05 - நேரம்:30 நிமிடம்

வினாப்பத்திரம் : குகப்படலம்

தயாரிப்பு :திரு.எ.த.ஜெயராஞ்சித் (0779050592)

BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

வினாத்தொகுதி:01

(ஆ) "முன்னவன்" என்று நினைந்திலன் 'மொய் புலி அன்னான் ஓர்

பின்னவன் நின்றனன்" என்றிலன் அன்னவை பேசானேல்,

என் இவன் என்னை இகழ்ந்தது?இவ் எல்லை கடந்து அன்றோ?

மன்னவர் நெஞ்சினில்,வேடர் விடும் சரம் வாயாவோ? (16)

(i) இப்பாடல் இடம்பெற்றுள்ள சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.

(ii) 'மொய் புலி அன்னான் ஓர் பின்னவன் நின்றனன்"எனும் தொடர் ஊடாக வெளிப்படத்தப்படுவது யாது?

(iii) இப்பாடலில் இடம்பெற்றுள்ள மேல்வரும் தொடர்களின் பொருளை எழுதுக.

(12 புள்ளிகள்)

வினாத்தொகுதி:02

(ஆ) 'கங்கை இரு கரை உடையான் கணக்கு இறந்த நாவாயான்

உங்கள் குலத் தனி நாதற்கு உயிர்த் துணைவன் உயர் தோளான்

வெங்கரியின் ஏறு அனையான் வில் பிடித்த வேலையினான்

கொங்கு அலரும் நறுந் தண் தார்க்குகன் என்னும் குறி உடையான்.(25)

(i) இப்படல் இடம்பெற்ற சந்தர்ப்பம் யாது?

(ii) இப்படல் இடம்பெற்ற அணிகளை எடுத்துக்காட்டி விளக்குக.

(iii) இப்படலில் சுமந்திரன்பற்றிய உமது மனப்பதிவை தெளிவுபடுத்துக.

(12 புள்ளிகள்)

www.lkedu.lk

உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

க.பொ.உயர்தரம் - தமிழ் - கம்பராமாயணம் - 06 - நேரம்:30 நிமிடம்

விடைப்பத்திரம் : குகப்படலம்

தயாரிப்பு :திரு.எ.த.ஜெயராஞ்சித் (0779050592)
BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

வினாத்தொகுதி:01

(அ) வந்து எதிரே தொழுதானை வணங்கினான் மலர் இருந்த
அந்தணனும் தனை வணங்கும் அவனும்,அவன்தன் அடிவீழ்ந்தான்.
தந்தையினும் களி கூரத் தழுவினான் - தகவு உடையோர்
சிந்தையினும் சென்னியினும் வீற்றிறுக்கும் சீர்த்தியான்.(32)

(i) இப்படல் இடம்பெற்ற சந்தர்ப்பம் யாது?

- **குகனும் பரதனும் ஒருவரை ஒருவர் வணங்கித் தழுவுதல்:** குகனும் பரதனும் பண்பு நலன்களை உடைய இருவர்சந்திப்பில் அளவு கடந்த அன்பின் பெருக்கால் நிகழும் நிகழ்ச்சிகளே இப்பாடலில்வருகின்றன.

(04 புள்ளிகள்)

(ii) இப்பாடலின் மேல்வரும் தொடர்களின் பொருளை இக்கால உரை நடையில் எழுதுக.

- மலர் இருந்த அந்தண்: திருமாலின் திருவுந்தித் தாமரையில் வீற்றிருக்கும் வேதியனாகிய பிரமன்.
- தகவு உடையோர்: நடுவு நிலைமையிற் சிறந்த மேலோர்.
- களி கூரத் தழுலுதல்: மகிழ்ச்சிமிக மார்போடு அணைத்துக்கொள்ளல்.
- சீர்த்தியான்: புகழ் உடைய பண்பு நலம் செநிந்த உத்தமன்.

(04 ள்ளிகள்)

(iii) பரதனதும் குகனதும் பெருமைகளை எடுத்துக்காட்டுக.

= பரதன்:மலர் இருந்த அந்தணனும் தனை வணங்கும் சிறப்புப் பெற்றவன். தாமரையில்வீற்றிருக்கும் வேதியனாகிய பிரமனும் தன்னை வணங்கும் சிறப்புப் பெற்றவன்

= குகன்: நடுவுநிலைமையிற்சிறந்த மேலோர்களது மனத்திலும், தலையிலும் ஏற்றிப்போற்றப்படும் புகழ் உடைய பண்பு நலம் செநிந்த உத்தமன்.

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

www.tkeduLk

வினாத்தொகுதி:02

(ஆ) தழுவின புளிஞர் வேந்தன் தாமரைச் செங்கணானை,
'எழுவினும் உயர்ந்த தோளாய்!எய்தியது என்னை?' என்ன,
'முழுது உலகு அளித்த தந்தை முந்தையோர் முறையினின்றும்
வழுவினன் அதனை நீக்க, மன்னனைக் கொணர்வான்' என்றான்.(33)

(i) புரதனின் கண்,தோள் என்பவற்றை விளக்க கையாண்ட அணிகளை எடுத்து விளக்குக.

= கண்: தாமரைச் செங்கணானை :செந்தாமரை போலும் கண்களை உடையவன்.

= தோள்: எழுவினும்உயர்ந்த தோளாய்:கணைய மரத்தினும் வன்மை மிக்குயர்ந்த தோள்களைஉடையவன்

(04 புள்ளிகள்)

(ii) தசரதனின் பெருமையையும் சிறுமையையும் எடுத்துக்காட்டுக.

- பெருமை: உலகு முழுது அளித்த தந்தை : உலகம் முழுவதையும் ஒரு குடை நீழலில் ஆட்சி செய்த சக்கரவர்த்தி.
- சிறுமை: முந்தையோர் முறையினின்றும்வழுவினன் : தன் மரபில் முன்னுள்ளாரது நீதி முறையிலிருந்தும் தவறிவிட்டவன்.

(04 புள்ளிகள்)

(iii) 'மன்னனைக்கொணர்வான்' எனும் தொடரினூடாக வெளிப்படுத்தப்படுவது யாது?

- பின்னரும் 'அண்ணனைக் கொணர்வான்' 'இராமனைக்கொணர்வான்' என்று கூறாமல் 'மன்னனைக் கொணர்வான்' என்றது காட்டில் இருப்பினும், நாட்டில் இருப்பினும் இராமனே அயோத்திக்கு அரசன் என்பதில் பரதனுக்குள்ள உறுதியை இத்தொடர் விளங்குகிறது.

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

www.ikeu.lk

www.lkedu.lk

உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

க.பொ.உயர்தரம் - தமிழ் - கம்பராமாயணம் - 07 - நேரம்:30 நிமிடம்

விடைப்பத்திரம் : குகப்படலம்

தயாரிப்பு :திரு.எ.த.ஜெயராஞ்சித் (0779050592)
BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

வினாத்தொகுதி:01

(ஆ) கேட்டனன், கிராதர் வேந்தன் கிளர்ந்து எழும் உயிர்ப்பன் ஆகி,
மீட்டும், மண் அதனில் வீழ்ந்தான் விம்மினன், உவகை வீங்க்
தீட்ட அரு மேனி மைந்தன் சேவடிக் கமலப் பூவில்
பூட்டிய கையன், பொய் இல் உள்ளத்தன், புகலலுற்றான்(34)

(i) இப்படலில் பரதனைக் குகன் வணங்கிப் பாராட்டி நெகிழ்த வாற்றை எடுத்துக்காட்டுக.

- பரதனின் வார்த்தைகேட்டு அவனது பெருந்தகைமையை உணர்தல்.
- மேல் எழுந்து மிகும் பெருமூச்சு உடையவனாகி நிற்றல்.
- முன்வணங்கியதோடு அன்றித் திரும்பவும் பூமியில் விழுந்து வணங்கிநிற்றல்.
- மன மகிழ்ச்சி மேல் உடம்பு பூரித்து பரதனது திருவடிகளாகிய தாமரை மலரில் இறுக அணைத்தகையுடனே பொய்யற்ற புரைதீர்ந்த மனத்தால் சில வார்த்தைகள் சொல்லல்

(04 புள்ளிகள்)

(ii) இப்படலில் பரதனைப் பற்றி கம்பன் பதிவு செய்தவை யாவை என எடுத்துக்காட்டுக.

- தீட்ட அரு மேனி மைந்தன் - இவன் இவ்வடிவமுடையவன் என சித்திரமாகவே வரைந்து காட்டவே அரிய திருமேனியையுடையவன்.
- பரதனது சேவடிக் கமலப் பூ - பரதனது திருவடிகள் தாமரை மலராக உருவகப்படத்தப்பட்டுள்ளது.

(04 புள்ளிகள்)

(iii) இப்படலினூடாக மூத்தவனாகிய குகன் பரதனை மண்ணில் வீழ்ந்து வணங்குதல் தகுமோ? **ஆராய்க.**

- மூத்தவனாகிய குகன் இப்போதுமண்ணில் வீழ்ந்து வணங்குதல் தகுமோ எனின், இருவர் இணையும்போது முதலில் இளையோர் மூத்தோரை வணங்குதலும், அவ்வாறு வணங்கிய இளையோரை பின்பு மூத்தோர் வணங்குதலும், அவ்வாறு வணங்கிய இளையோரை மூத்தோர் எடுத்துத்தழுவி விசாரித்தலும் இயல்பு.
- இங்கு, தான் வந்த நோக்கத்தைப் பரதன் கூறக் கேட்ட குகனுக்குப் பரதன் பரதனாகவே காட்சி அளிக்கவில்லை. அவன் தம்பி முறையும் புலனாகவில்லை.
- இராமனின் காலில் குகன் விழுந்து பணிவது முறையானாற் போல, பரதன் காலிலும் விழுந்து பணிந்தான் ஆதலின் இது தகும் எனலாம்.

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

www.ikeau.lk

வினாத்தொகுதி:02

(ஆ) என் புகழ் கின்றது ஏழை,எயினனேன்? இரவி என்பான்
தன் புகழ்க் கற்றை மற்றை, ஒளிகளைத் தவிர்க்குமாபோல்,
மன் புகழ் பெருமை நுங்கள் மரபினோர் புகழ்கள் எல்லாம்.
உன் புகழ் ஆக்கிக்கொண்டாய் உயர் குணத்து உரவுத் தோளாய்!(36)

(i) இச்செய்யுள் இடம்பெற்ற சந்தர்ப்பத்தைக்குறிப்பிடுக.

- பரதனிடம் குகன் , இங்கு நீ வந்த காரணம் யாது என வினவியபோது, ''உலகம் முழுவதும் ஆட்சி செய்த எனது தந்தையாகிய தசரதன் , முன்னைய அர நீதியினின்றும் வழுவி விட்டான். அவ் அநீதியை நீக்கும் பொருட்டு வந்துள்ளான்'' எனப் பரதன் கூறிய சந்தர்ப்பத்தில் குகன் உரைத்தது.

(04 புள்ளிகள்)

(ii) இப்பாடலில் பரதன் எவ்வாறு சிறப்பிக்கப்படுகின்றான்?

- உத்தமமான குணங்களையும் வலிவமயான தோள்களையும் உவடயவன் எனக் குகன்புகழ்ந்துவரைப்பதன் மூலம்
- உன்னை எவ்வாறு புகழ்வது எனக் குகன் பைரதவனப் பார்த்து வினவுவதன்மூலம்
- பரதனது புகழுக்கு சூரியனது கிரணங்கவள உவவம கூறுவதன் மூலம்.

(04 புள்ளிகள்)

(iii) இதில் பயின்று வந்துன்ன அணியைக் குறிப்பிட்டு விளக்குக.

- சூரியனது ஒளி ஏனைய (சந்திரன் முதலிய) ஒளிகளையெல்லாம் மவறப்பது போல உலகம் புகழும் சூரிய குலத்து அரசர்களின் கீர்த்திய எல்லாம் தனது புகழால் மறைத்தவன் என்று பரதன் குறிப்பிடப்படுகின்றான்
- உவமானம்: சூரியனது ஒளி,உவமேயம்: பரதனது கீர்த்தி
- பொதுத்தன்மை: ஏவனய ஒளிகளை,கீர்த்தியை மறைத்து மேன்மைப்படுதல்.

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

www.ikeduk

உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

க.பொ.உயர்தரம் - தமிழ் - கம்பராமாயணம் - 08 - நேரம்:30 நிமிடம்

விடைப்பத்திரம் : குகப்படலம்

தயாரிப்பு :திரு.எ.த.ஜெயராஞ்சித் (0779050592)
BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

வினாத்தொகுதி:01

(ஆ) நங்கையர் நடையின் அன்னம் நாண் உறு செலவின் நாவாய்.
கங்கையும் இடம் இலாமை மிடைந்தன - கலந்த எங்கும்,
அங்கொடு, இங்கு, இழித்தி ஏற்றும் அமைதியின்,அமரர் வையத்து
இங்கொடு அங்கு இழித்தி ஏற்றும் இருவினை என்னல் ஆன (46)

(i) கையாளப்பட்டுள்ள அணிகளை எடுத்துக்காட்டுக.

- **உவமை:** நங்கையர் நடையின்: பெண்கள் நடைபோன்ற நடையையும் அன்னம் நாணுறு செலவின்: அன்னப் பறவைகள் நாணப்படும் படியான நீரிற் செல்லுதலும் உடைய, நாவாய்
- **உயர்வு நவிச்சி:** நாவாய் கங்கையும் இடம் இலாமை மிடைந்தன

(04 புள்ளிகள்)

(ii) படகுகளின் தோற்றப் பொலிவினை மதிப்பிடுக.

- பெண்கள் நடைபோன்ற நடை
- அன்னப் பறவைகள் நாணப்படும் படியான நீரிற் செல்லுதலும்
- கங்கா நதியில் இடம் இல்லை என்னும்படி நெருங்கி எங்கும் கலந்தன.

(04 புள்ளிகள்)

(iii) "அங்கொடு, இங்கு, இழித்தி ஏற்றும் அமைதியின்,அமரர் வையத்து இங்கொடு அங்கு இழித்தி ஏற்றும் இருவினை என்னல் ஆன"எனும் தொடரில் ஒப்பிடப்பட்ட விடயம் யாது?

- அக்கரையில் உள்ளாரை இக்கரையிலும் ஏற்றி இறக்கும் தன்மையினால் தேவருலகமாகிய அவ்வுலகத்தோடு இவ்வுலகில் உள்ளாரை ஏற்றி இறக்கும் புண்ணியம், பாவம் என்னும் என்று சொல்லும் படியாக இருந்தன.

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

www.lkedu.lk

<u>வினாத்தொகுதி:02</u>

(ஆ) பொலங் குழை மகளிர், நாவாய்ப் போக்கின் ஒன்று ஒன்று தாக்க,
மலங்கினர் இரண்டு பாலும் மறுகினர் வெருவி நோக்க,
அலங்கு நீர் வெள்ளம் தள்ளி அழிதர, அங்கம் இங்கும்
கலங்கலின், வெருவிப் பாயும் கயற்குலம் நிகர்த்த, கண்கள்.(55)

(i) மரக்கலத்தில் செல்லும் மகளிர் நிலையாது?

- மனம் கலங்கி, மயங்கி அச்சமுற்று, இரண்டு பக்கமும் பார்த்தல்.
- மிரண்டு பார்க்கு கண்கள்
- ஆற்று நீர் அங்கும் இங்குமாகக் கலங்குவதனால் பயந்து துள்ளுகின்ற, மீன் கூட்டத்தை ஒத்துள்ளன.

(04 புள்ளிகள்)

(ii) கையாளப்பட்டுள்ள உவமையை எடுத்துக்காட்டுக.

- கலத்தின் மோதலால் பயந்து மிரளும் மகளிர் கண்களுக்கு, கலம் செல்லும் வேகத்தால் தள்ளப்படும் நீரில் பயந்து துள்ளும் கயல் மீன்கள் உவமையாயின.

(04 புள்ளிகள்)

(iii) பெண்களின் அழகு எவ்வாறு எடுத்தக்காட்டப்பட்டுள்ளது?

- பொன்னாலியன்ற குழை அணிந்த மகளிர்
- பயந்து துள்ளுகின்ற மீன் கூட்டத்தை ஒத்துள்ள கண்கள்.

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

www.ikedu.lk

உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

க.பொ.உயர்தரம் - தமிழ் - கம்பராமாயணம் - 09 - நேரம்:30 நிமிடம்

விடைப்பத்திரம் : குகப்படலம்

தயாரிப்பு :திரு.எ.த.ஜெயராஞ்சித் (0779050592)

BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

வினாத்தொகுதி:01

(ஆ) சுழித்து நீர் வரு துறை யாற்றை, சூழ் படை
கழித்து நீங்கியது என, கள்ள வாசையை
அழித்து, வேறவனி பண்டாண்ட வேந்தரை
இழித்து, மேலேறினான் தானு மேறினான்.(62)

(i) இப்பாடல் இடம்பெற்றுள்ள சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.

- பெருஞ் சேனையுடன் இராமனைக்காண கங்கைக் கரையை வந்தடைந்த பரதன், தன் படைகளைத்திரட்டி ஒழுங்குமுறையாக கங்கையின் மறுபுறத்தில் அனுப்பிவிட்டு தானும் இறுதியாக படகில் ஏறிய சந்தர்பத்தில்.

(04 புள்ளிகள்)

(ii) 'கள்ள ஆசை' எனும் தொடரூடாக கம்பன் உணர்த்த விளைந்தது யாது?

- கைகேகியிடத்து உண்டான வஞ்சகமான ஆசைதான் இக்கள்ள ஆசை:மூத்தவன் இருக்கும்போது இளையவனை ஆட்சிப்பீடம் ஏறச்செய்யும் தர்மமற்ற ஆசையையே கம்பன் கள்ளத்தனமான வஞ்சனை பொருந்திய ஆசை என்கிறான்.அதனை வெல்வது கடினமாயினும் அதனை வென்றவனாக பரதனைப் பெருமைப்படுத்தினான் கம்பன்.

(04 புள்ளிகள்)

(iii) கையாளப்பட்டுள்ள அணியினை எடுத்துக்காட்டி, அதனூடாக கம்பன் புலப்படுத்தும் உட்கருத்து யாதெனக்குறிப்பிடுக.

- **உவமை: சுழித்துநீர் வரு துறை யாற்றைச் சூழ் படை கழித்து நீங் கியதெனக் கள்ள ஆசையை அழித்து: உவமானம்**:சுழிகளோடு கூடிய நீர்த்துறைக் கரையை அமைந்த கங்கை ஆற்றைக் கடத்தல், **உவமேயம்**:வஞ்சனையைக் கடத்தல்,**பொதுத்தன்மை**:நீக்குதல்
- **உட்கருத்து:** அகப்பட்டவரை மூழ்கடித்து அழித்துவிடும் சுழிகளோடு கூடிய நீரை உண்டாக்கிப் பெருகும் பல இறங்கு துறைக் கரையை உடைய கங்கை ஆற்றைக் கடப்பதுபோல பல்வேறு சூழ்ச்சிகள் உடைய தன் வாழ்க்கைப்பாதையையும் பரதன் கடந்து சென்றான்.

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

www.kedu.lk

வினாத்தொகுதி:02

(ஆ) என்றலுமே யடியின்மிசை நெடிது வீழ்ந்து தழுவானை யிவன்யா ரென்று
கன்றுபிரி கராவின் றுயருடைய கொடிவினவ கழற்கால் மைந்த
னின்றுணைவ னிராகவனுக் கிலக்குவனுக்கு மிளையவற்கு மெனக்கு மூத்தான்
குன்றனைய நெடுந்தோட் குக னென்பா னிந்நின்றகுரிசி லென்றான்(66)

(i) 'கொடி' என்று சுட்டப்படுபவரின் துயர்நிலை காட்டப்படுமாற்றை எடுத்துக்காட்டுக.

- கன்றினைப் பிரிந்த காராம்பசுவின் துயர் நிலையில், கோசலை இருப்பதாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது

(04 புள்ளிகள்)

(ii) 'மூத்தான்' என்று சுட்டப்படுபவன், யார் யாருக்கு மூத்தவனாக விளங்குகிறான் என்பதைச் செய்யுளில் சொல்லப்பட்டுள்ள ஒழுங்கில் கூறுக.

- இலக்குவன், சத்துருக்கன், பரதன் ஆகியோருக்கு மூத்தவனாக விளங்குகிறான்

(04 புள்ளிகள்)

(iii)"குன்றனைய நெடுந்தோட் குகனென்பா னிந்நின்றகுரிசி லென்றான்". - இங்கு வந்துள்ள அணியைக் கூறி, விளக்குக.

- உவமை அணி:குகனின் நெடுந்தோளுக்கு நெடுங்குன்று உவமையாக்கப்பட்டது.
- உவமானம் : குன்று,உவமேயம் : நீண்ட தோள்,பொதுத்தன்மை : திரண்ட வலிமை

(04 புள்ளிகள்)
(12 புள்ளிகள்)

www.lkedu.lk

www.lkedu.lk

உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

க.பொ.உயர்தரம் - தமிழ் - கம்பராமாயணம் - 10 - நேரம்:30 நிமிடம்

விடைப்பத்திரம் : குகப்படலம்

தயாரிப்பு :திரு.எ.த.ஜெயராஞ்சித் (0779050592)
BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

வினாத்தொகுதி:01

(ஆ) என்னைக் கேட்டு, அவ் இரக்கம் இலாளையும்
தன் நல் கையின் வணங்கினன் தாய் என
அன்னப் பேடை சிறை இலது ஆய்க் கரை
துன்னிற்று என்னவும் வந்தது, தோணியே. (70)

(i) இப்பாடல் இடம்பெற்றுள்ள சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.

- படைகளை அக்கரைக்கு அனுப்பிய பரதன் நாவாயில் ஏறி குகனையும் தன்னுடன் வந்தவர்களையும் ஒருவருக்கொருவர் அறிமுகஞ் செய்த சந்தர்ப்பத்தில்.

(04 புள்ளிகள்)

(ii) இப்பாடலில் கைகேகியின் நடத்தைபற்றி கவிச்சக்கரவர்த்தி கம்பன் எத்தகைய மனப்பதிவை ஏற்படுத்துகின்றான்?

- **இரக்கம் இலாள்**: தயரதன் உலகைப்பிரியவும் இராமன் நாட்டைப்பிரியவும் காரணமான இருந்த இரக்கமற்றவள் கைகேயியே.
- தன் மனைவியருள் அதிகம் நேசிக்கும் தன் கணவனாகிய தசரதனை வரத்தால் கொன்றமையாலும் கைகேகியின் மகனை விட அதிக விருப்புக்குரிய இராமனை சூழ்ச்சியால் வனத்திற்கு அனுப்பியமையாலும் கையேகி 'இரக்கமில்லாள்'எனக் குறிப்பிடப்பட்டாள்.

(04 புள்ளிகள்)

(iii) இரக்கமில்லாத கைகேகியை குகன் 'தாய்' என கருதியமைக்கான காரணங்கள் யாவை?

- மற்றத் தாயரைத் 'தாயர்' என நினைத்து வணங்கினான் என்று கூறாமல், இங்கே கைகேயியைத் தாய் என வணங்கினான் எனக் கூறியது குகனுக்குக் கைகேயி சிறப்பு வகையிலும் தாயாதல் பற்றி அதனை உணர்ந்தே குகன் தாய் எனவணங்கினன்.
- கைகேயி வரம் வாங்கி இராமனை வனத்துக்கு அனுப்பாமல் இருந்திருப்பின் குகன் எப்படி இராம சகோதரனாக முடியும் ஆகவே, குகனை இராம குடும்பத்தில் ஒரு சகோதரனாகச் சேர்த்தவள் கைகேயியே அன்றிக் கோசலையும் சுமித்திரையும் அல்லர் என்பதைக் குறிப்பாகத் 'தாய் என' என்ற சொற்களால் பெற வைத்தார்.

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

www.lkedu.lk

வினாத்தொகுதி:02

(ஆ) பரத்தின் நீங்கும் பரத்துவன் என்னும் பேர்
வரத்தின் மிக்கு உயர் மாதவன் வைகு இடம்,
அருத்தி கூர, அணுகினன் ஆண்டு, அவன்
விருத்தி வேதியரோடு எதிர் மேவினான். (72)

(i) இப்பாடல் இடம்பெற்றுள்ள சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.

- கங்கைக்கரையை கரைசேர்ந்தவர்களை பரத்துவாச முனிவர் வரவேற்ற சந்தர்ப்பத்தில்

(04 புள்ளிகள்)

(ii) இப்பாடலில் வெளிப்படும் பரத்துவாசரின் பெருமைகளைக் குறிப்பிடுக.

- வினைச் சுமையிலிருந்து விலகியவன்.
- மேன்மையிற் சிறந்த உயர்ந்த முனிவன்
- அறுதொழில் உடைய அந்தணர்கள் புடை சூழ இருத்தல்.

(04 புள்ளிகள்)

(iii) இப்பாடலில் பின்வரும் தொடர்களின் பொருளைக் குறிப்பிடுக.

- பரம்(பாரம்) - வினைச் சுமை
- எதிர்மேவல் - எதிர்கொண்டு வரல்.
- அருத்தி கூர - அன்பு மிக, அன்பு அதிகரிக்க
- விருத்தி வேதியர் - ஓதல், ஒதுவித்தல், வேட்டல், வேட்பித்தல் ஈதல், ஏற்றல் என்ற அறுதொழில் உடைய அந்தணர்.

(04 புள்ளிகள்)

(12 புள்ளிகள்)

www.lkedu.lk